பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

02 07 2024 **TUESDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

தலைப்புச் செய்திகள்

1. குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களவையில் இன்று உரையாற்றுகிறார்.

2. தேசிய ஜனநாயக கூட்டணி உறுப்பினர்கள் நாட்டின் நலனை கருத்தில்கொண்டு, நாடாளுமன்றத்தில் செயல்பட வேண்டும் என்று பிரதமர் வலியுறுத்தியுள்ளார்.

3. ஷாங்காய் ஒத்துழைப்பு உச்சிமாநாட்டில் வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தலைமையிலான பிரதிநிதிகள் குழு கலந்துகொள்ளும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4. ஜார்கண்ட் மாநிலத்தில் பாதுகாப்புப்படையினர் நடத்திய தேடுதல் வேட்டையின்போது ஆறு மாவோயிஸ்டுகள் கைது செய்யப்பட்டனர்.

5. உத்ராகண்ட், அஸ்ஸாம், மேகாலயா மாநிலங்களில் இன்று அதிகனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

*---- இனி விரிவான செய்திகள் --*

<<<<<<>>>>>>

குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களவையில் இன்று மாலை உரையாற்றுகிறார்.

இந்நிலையில், மாநிலங்களவையில் திரு நரேந்திர மோடி நாளை உரையாற்ற உள்ளதாக நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, குடியரசுத் தலைவரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நடைபெற்று வருகிறது.

மக்களவையில் இன்று நடைபெற்ற விவாதத்தில் பங்கேற்று பேசிய சமாஜ்வாதி கட்சியை சேர்ந்த திரு அகிலேஷ் யாதவ், உலக அளவில் ஐந்தாவது பெரிய பொருளாதாரமாக இந்தியா உயர்ந்தபோதும், சராசரி தனிநபர் வருமானம் மிக குறைவாக இருப்பதாக கூறினார்.

இளையோருக்கு வேலைவாய்ப்பு அளிப்பதில் அரசு முக்கியத்துவம் தருவதில்லை என்று திரு அகிலேஷ் யாதவ் தெரிவித்தார்.

மக்களவையில் எதிர்க்கட்சித்தலைவர் திரு ராகுல்காந்தி ஆற்றிய உரைக்கு எதிர்ப்பு தெரிவித்து பேசிய பிஜேபி உறுப்பினர் திரு சந்தோஷ் பாண்டே, கட்டமைப்புத் துறையில் மத்திய அரசு பல்வேறு வளர்ச்சிப்பணிகளை மேற்கொண்டிருப்பதாக தெரிவித்தார்.

மாநிலங்களவையில் நடைபெற்ற விவாதத்தின்போது பங்கேற்று பேசிய அஸ்ஸாம் கனபரிஷத் உறுப்பினர் திரு பைரேந்திர பிரசாத், அஸ்ஸாம் மாநிலத்தில் சில பிரிவினரை பழங்குடியினராக அறிவிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

சட்ட விரோதமாக குடியேறுபவர்களின் எண்ணிக்கை அம்மாநிலத்தில் அதிகரித்திருப்பதாகவும், அதனை தடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு பைரேந்திர பிரசாத் தெரிவித்தார்.

பிஜேபி உறுப்பினர் திரு அசோக் ராவ் சவான் பேசுகையில், நீட் தேர்வு முறைகேடுகளில் ஈடுபட்ட குற்றவாளிகள் நியாயமான விசாரணைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று தெரிவித்தார்.

மேலும், கடந்த பத்தாண்டுகளில் மத்திய அரசால் மேற்கொள்ளப்பட்ட சாதனைகளை குடியரசுத் தலைவர் தமது உரையில் குறிப்பிட்டிருப்பதாக அவர் கூறினார்.

<<<<<<>>>>>>

நாட்டின் நலனை கருத்தில்கொண்டு, தேசிய ஜனநாயக கூட்டணி உறுப்பினர்கள், நாடாளுமன்றத்தில் செயல்பட வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் இன்று நடைபெற்ற தேசிய ஜனநாயக கூட்டணி உறுப்பினர்கள் கூட்டத்தில் பங்கேற்று பேசிய அவர், கூட்டணி உறுப்பினர்கள் நாடாளுமன்ற விதிகளை பின்பற்றி நடந்துகொள்ள வேண்டும் என்று தெரிவித்தார்.

நாடாளுமன்ற ஜனநாயகத்தை காக்கும் வகையில் உறுப்பினர்கள் நன்னடத்தையை வெளிப்படுத்துவது அவசியம் என்று அவர் குறிப்பிட்டார்.

இக்கூட்டம் தொடர்பாக செய்தியாளர்களை சந்தித்து பேசிய மத்திய நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு, நாட்டுக்கு சேவையாற்றுவதே கூட்டணி உறுப்பினர்களின் முதல் நோக்கமாக இருக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

மேலும், பிரதமர் அருங்காட்சியகத்தை அனைத்து உறுப்பினர்களும் குடும்பத்தோடு வந்து பார்வையிட வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தியதாக திரு கிரண் ரிஜிஜு கூறினார்.

<<<<<<>>>>>>

இயற்கையை பாதுகாப்பதன் மூலமாக எதிர்கால தலைமுறையினருக்கு சுத்தமான சுற்றுச்சூழலை வழங்கும் பொறுப்பு நம் அனைவருக்கும் உள்ளது என்று மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் உள்ள இந்திய வேளாண்மை ஆய்வு நிறுவன வளாகத்தில் இன்று மரக்கன்று ஒன்றை நட்டபின் அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், ஒவ்வொரு நாளும் ஒரு மரம் நடுவோம் என்ற உறுதிமொழியை பின்பற்றும் வகையில் இதனை மேற்கொண்டதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

மதுபானக்கொள்கை முறைகேடு வழக்கில் சிபிஐ கைது செய்ததற்கு எதிராக தில்லி முதலமைச்சர் திரு அரவிந்த் கெஜ்ரிவால் தாக்கல் செய்துள்ள மனு மீதான விசாரணை இன்று தில்லி உயர்நீதிமன்றத்தில் நடைபெறுகிறது.

நீதிபதி மீனா பன்சால் கிருஷ்ணா அமர்வு இந்த வழக்கை விசாரிக்கிறது.

இந்த வழக்கில் சிபிஐ, புதிய ஆதாரங்கள் எதையும் சமர்ப்பிக்கவில்லை என்று திரு கெஜ்ரிவால் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

கஜகஸ்தானில் நடைபெறும் ஷாங்காய் ஒத்துழைப்பு உச்சிமாநாட்டில் வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தலைமையிலான பிரதிநிதிகள் குழு கலந்துகொள்ளும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

அஸ்தானாவில் நடைபெறும் இந்த உச்சிமாநாட்டில், வரும் 4-ஆம் தேதி நடைபெறும் வெளியுறவு அமைச்சர்கள் நிலையிலான சந்திப்பில் திரு ஜெய்சங்கர் பங்கேற்பதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கடந்த 20 ஆண்டுகளில் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்தும், நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பு குறித்தும் ஆய்வு செய்யும் நோக்கில், இக்கூட்டத்தில் விவாதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக அந்த அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.

பாதுகாப்பான ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு எனும் பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வைக்கு இந்தியா முன்னுரிமை அளிக்கும் என்று வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

ஆங்கிலத்தில் இருந்து மொழி பெயர்க்கப்பட்ட 100 சட்ட புத்தகங்களை தமிழக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இன்று சென்னை தலைமைச்செயலகத்தில் வெளியிட்டார்.

மாநில சட்டமொழி ஆணையம் மூலம் இந்த புத்தகங்கள் மொழிபெயர்க்கப்பட்டதாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியின்போது, தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்ட சிறை அலுவலர்களுக்கான பணிநியமன ஆணைகளையும் முதலமைச்சர் வழங்கினார்.

<<<<<<>>>>>>

ஜார்கண்ட் மாநிலத்தில் பாதுகாப்புப்படையினர் நடத்திய தேடுதல் வேட்டையின்போது ஆறு மாவோயிஸ்டுகள் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்து ஆயுதங்கள், வெடிப்பொருட்கள் மற்றும் தடை செய்யப்பட்ட புத்தகங்கள் கைப்பற்றப்பட்டதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

இதனிடையே, ராஞ்சி காவல்துறையினரிடம் ஒரு மாவோயிஸ்ட் இன்று சரணடைந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>

தாய்லாந்து – இந்தியா இடையிலான கூட்டு ராணுவ பயிற்சி தாய்லாந்தில் நடைபெற்று வருகிறது.

**Vachiraprakan** துறைமுகத்தில் நேற்று தொடங்கிய இப்பயிற்சியில் இரு நாடுகளை சேர்ந்த 76 வீரர்கள் பங்கேற்றுள்ளனர்.

இரு நாடுகளுக்கு இடையேயான ராணுவ ஒத்துழைப்பை வலுப்படுத்தும் நோக்கில் இந்த பயிற்சி மேற்கொள்ளப்படுகிறது.

காடுகள் மற்றும் நகர்ப்புறங்களில் தீவிரவாத நடவடிக்கைகளை முறியடிப்பது, நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி கண்காணிப்பை தீவிரப்படுத்துவது உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளில் பரஸ்பர ஒத்துழைப்பை மேம்படுத்தும் வகையில் இந்த பயிற்சி அமைந்துள்ளதாக மத்திய பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த பயிற்சி வரும் 15-ஆம் தேதிவரை நடைபெறுகிறது.

<<<<<<>>>>>>

மங்கோலிய நாடாளுமன்ற தேர்தலில் வெற்றிபெற்ற உறுப்பினர்கள் இன்று பதவி பிரமாணம் எடுத்துக்கொண்டனர்.

அந்நாட்டு நாடாளுமன்றத்தின் மூத்த உறுப்பினர் திரு துகர் ரெக்டல், அவர்களுக்கு பதவி பிரமாணம் செய்துவைத்தார்.

கடந்த மாதம் மங்கோலியாவில் ஒன்பதாவது நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது.

மொத்தம் உள்ள 126 இடங்களில் மங்கோலிய மக்கள் கட்சி 68 இடங்களிலும், எதிர்க்கட்சியான ஜனநாயக கட்சி 48 இடங்களிலும் வெற்றிபெற்றன.

<<<<<<>>>>>>

சூடான் நாட்டில் வான்வழியாக நடத்தப்பட்ட தாக்குதலில் ஒன்பது குழந்தைகள் உயிரிழந்தனர். 11 பேர் காயமடைந்தனர்.

மேற்கு சூடானில் உள்ள **El Fasher** நகரில் உள்ள ஒரு வழிபாட்டுத் தலத்தில் ட்ரோன் மூலம் இத்தாக்குதல் நடத்தப்பட்டதாக அந்நாட்டு செய்தி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

**<<<<<<>>>>>>**

உத்தராகண்ட், அஸ்ஸாம், மேகாலயா மாநிலங்களில் இன்று அதிகனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஹிமாச்சலப்பிரதேசம், பஞ்சாப், ஹரியானா, சண்டிகர், உத்தரபிரதேசம், ராஜஸ்தான், பீகார் உள்ளிட்ட மாநிலங்களில் அடுத்த 4 நாட்களுக்கு தொடர்ந்து கனமழை பெய்ய வாய்ப்பிருப்பதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

குஜராத் மற்றும் மேற்கு கடற்கரை பகுதிகளிலும் அடுத்த நான்கு நாட்களுக்கு மழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் வடமேற்கு மாநிலங்களில் தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்திருப்பதாகவும், ஜூலை மாதத்தில் வழக்கத்தைவிட அதிக மழை அப்பகுதிகளில் பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

இதனிடையே, அஸ்ஸாமில் வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்ட 13 மீனவர்களை இந்திய விமானப்படை காப்பாற்றியுள்ளது.

தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்காலில் அடுத்த ஐந்து நாட்களுக்கு லேசானது முதல், மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேலும், நீலகிரி, கோவை மாவட்ட மலைப்பகுதிகளில் இன்று கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருப்பூர், தேனி, திண்டுக்கல் மாவட்ட மலைப்பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பிருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

கேரள, கர்நாடக கடலோரப் பகுதிகள், மத்திய அரபிக்கடல் பகுதிகள், தெற்கு மற்றும் மத்திய வங்கக்கடல் பகுதிகள், அதையொட்டிய வடக்கு ஆந்திர கடலோரப் பகுதிகளில் இன்று முதல் இரண்டு

நாட்களுக்கு சூறாவளிக் காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் அப்பகுதிக்கு செல்ல வேண்டாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஜிம்பாப்வேவுக்கு எதிரான கிரிக்கெட் போட்டியில் பங்கேற்பதற்காக இந்திய கிரிக்கெட் அணி இன்று ஹராரே புறப்பட்டு சென்றது.

இந்த அணியின் கேப்டனாக சுப்மன் கில் செயல்படுவார் என்றும், இடைக்கால பயிற்சியாளராக வி வி எஸ் லஷ்மண் செயல்படுவார் என்றும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது.

ஜிம்பாப்வேயில் வரும் 6-ஆம் தேதி முதல், 14-ஆம் தேதிவரை நடைபெறும் ஐந்து டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டி கொண்ட தொடரில் இரு அணிகளும் பங்கேற்கின்றன.

<<<<<<END>>>>>>